முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் தொண்டரடிபொடி ஆழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.01.2019, வியாழக்கிழமை

1. **வறுமை கொண்டு வாடும் மக்களே**
**வளமான இயற்கைச் சூழலும்**
**பெருமைபட பொருள் வளமும்**
**பிரச்சினை இல்லாத வாழ்வும் காண**
2. காணவே காக்கும் ஞானியான
கலியிடர் வெல்லும் அரங்கமகான்
ஞானவழிகளை ஏற்று வரவே
நம்பகம்பட வாழ்வு வளம் பெறுவரென கூறி
3. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி கலை திங்கள்**
**தெரியவே சூல திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 3ம் நாள் 17.01.2019, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு தொண்டரடிபொடியாழ்வார் யானும்**
4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வான பாதுகாப்பு கூட்டி
ஞானவழி மக்களை உருவாக்க
ஞானியாக வந்து அருளும் அரங்கன்
5. அரங்கன் ஆசிபெற்ற எல்லோரும்
ஆபத்தில்லா வாழ்வு காண்பர்
வரங்கள் பெறுகின்ற வண்ணம்
வாரி தருமத்தில் உதவி நின்று
6. நின்றுமே அரங்கன் பெருமையை
நிலை தருமத்தை பரப்பியே
நன்றான சுத்தநெறிபட
ஞானிகளை பூஜித்து வருக
7. வருகவே விரும்புகின்றவாறு
வரும் மக்கள் வாழ்வினில்
ஆறுதலும் உண்மையான மாறுதலும்
அளவிலா கண்டு சிறப்பு காணும்
8. காணவே கலியுக மக்களே
கட்டாயம் அரங்க ஞானியரின்
ஞான பூசை கலந்து வருவதுடன்
ஞானம் தரும் நல்பக்குவம் தரும்
9. தருகின்ற ஞானத்திருவடி நூலை
தவசிகளின் ஞான நூல்களை
வருமுலகில் தொடர்ந்து வாசித்து
வழிமொழிந்து பின்பற்றி வர

10. வருகவே வாழ்க்கை மாறும்
வருகவே கலகமிடர் இல்லாத
முருகப்பெருமான் அருள்தயவுமிக்க
முழுமைபட அமைதியான வாழ்வு பெருகி

11. பெருகியே அரங்கன் வழிகாட்டலில்
பேருலகே ஞானயுகம் ஆகும்
முருகப்பெருமான் ஆளுமைக்கு வரும்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நுல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிபொடியாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

வறுமையில் வாடுகின்ற மக்களே உங்களது வறுமை நீங்கி வளமான வாழ்வை வாழ்ந்திட வளம்மிக்க இயற்கை சூழலும் பெருமைமிக்க வகையில் பொருள் வளமும் கொண்டு பிரச்சனைகள் ஏதும் இல்லாத வளமான வாழ்வை நீங்கள் வாழ வேண்டுமாயின் இவ்வுலகை காக்கும் மகா ஞானியான, வரும் கலியுகத்தின் துன்பங்களை வென்று மக்களை காக்கின்ற அரங்கமகா தேசிகனாரின் ஞானவழிகளை ஏற்று வாழ்வினில் கடைப்பிடித்து வரவர, உங்களது வாழ்வு உறுதியாக வளம் பெறும் என்றே கலியுக அவதார ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 3ம் நாள் 17.01.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே தொண்டரடிப்பொடி ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

உலகினில் சக்திமிக்க பாதுகாப்பை அருள்பாதுகாப்பை மக்களுக்கு அருளி மக்களை ஞானவழியினில் வரச் செய்து ஞானவழிதனிலே நடத்தி வழிகாட்டி செல்லும் மகா ஞானகுருவாக மகா ஞானியாக அவதரித்து அருள்புரிந்து கொண்டிருக்கும் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளினைப் பெற்றிட்ட அனைவரும் ஆபத்துகள் இல்லாத வாழ்வினை வாழ்வார்கள்.

அரங்கன் மனம் மகிழ்ந்து வரம் அருளும்படியாக அரங்கமகான் உலக நலன் கருதி செய்கின்ற தானதருமப் பணிகள் வளர்ச்சியடைய உதவிகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் வருவதுடன் உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவருள் பெருமைகளை உலகமெலாம் கூறி அரங்கன் ஆற்றும் தருமங்களையும் உலகமெலாம் பரப்பியும் உலகினில் நன்மையே தரவல்ல வல்லமைமிக்க ஞானநெறியான அரங்கன் வகுத்திட்ட தூயநெறியில் நின்று ஞானிகளை தவறாமல் மறவாமல் நெறி வழுவாமல் நின்று பூஜித்து வரவர, அவரவரும் விரும்பியவாறு அவர்களது வாழ்வினில் ஆறுதலும் உண்மையான மாறுதலும் அளவிலாத வகையிலே அற்புதமாய் கண்டு சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள்.

ஆதலினால் கலியுக மக்களே நீங்களெல்லாம் அவசியம் அரங்கன் நடத்தும் ஞானபூஜைகளிலே கலந்து ஞானிகளின் அருளாசிகளையும் அரங்கமகானின் அருளாசிகளையும் பெறுவதுடன் ஞானமளிக்கும் நல்ல பண்புகளை நற்பக்குவத்தினை தந்தருளும் ஞானநூலாகிய ஞானத்திருவடி நூலினையும் அரங்கனின் ஞானநூல்களையும், ஞானிகளின் ஞானநூல்களையும் தொடர்ந்து படித்து வர வேண்டும், படிப்பதுடன் ஞானிகள் கூறும் தருமத்தின் நெறியினை பின்பற்றி வர வேண்டும்.

இவ்விதமே தர்மத்தின் நெறியினை பின்பற்றி வாழ்ந்து வர, வாழ்க்கையே நல்வாழ்வாக மாறிடும், கலகம் இல்லாத துன்பங்கள் இல்லாத நல்வாழ்வாய் முருகப்பெருமானின் அருள் தயவுமிகுந்த வாழ்வினை மக்கள் வாழ்ந்து உலகினில் அரங்கனின் வழிகாட்டலில் நன்மக்கள் பெருகியே இந்த பேருலகமே ஞான உலகமாக ஆகி கலியுகம் ஞானயுகமாக ஆகிடும். இந்த உலகமே முருகப்பெருமானின் ஞானஆட்சியின் கீழ்வந்து ஞானயுகம் ஆகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

–சுபம்–